# யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினால் நடாத்தப்படும்

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை – 2015 ஓகஸ்ட்**

**மாதிரி வினாத்தாள் - 2**

| | | |
|---|---|---|
| **புவியியல் - I**<br>**Geography - I** | **22 T I** | **இரண்டு மணித்தியாலங்கள்**<br>**Two hours** |

**அறிவுறுத்தல்கள்**

1. ,வ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
2. பகுதி -ஐஇ 30 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. பகுதி -ஐ இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
3. பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
4. பகுதி ஐஇ பகுதி ஐஐ ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

❖ **ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) 10.5 கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதியொன்று இலங்கையின் 1 : 50, 000 அளவுத்திட்டப் படத்தில் என்ன அளவினால் காட்டப்படும்
   1) 10.5 cm  2) 21 cm  3) 42 cm
   4) 52 cm  5) 5.25 cm (..............)

2) தொடர்ச்சியான தரவுகளுக்குரிய மூன்று மாறிகளாவன
   1) மழைவீழ்ச்சி, பாடசாலை வரவுப்பதிவேடு, சனத்தொகை அடர்த்தி
   2) தாவரங்களின் வளர்ச்சி, நாளாந்த வெப்பநிலை, சிசுக்களின் நிறை
   3) காட்டு நிலப்பகுதி, பராமரிக்கப்பட்ட நோயாளர் எண்ணிக்கை, மண் ஈரப்பதன்
   4) புரத நுகர்வு, ஆவியாக்கம், தொழிலாளர் எண்ணிக்கை
   5) வீதி விபத்துக்கள், சுற்றுலாப் பயணிகளின் வருகை, ஏற்றுமதி வருமானம் (..............)

3) புவியியல் தகவல் ஒழுங்கொன்றின் பிரதான மூன்று கூறுகளாவன
   1) விமான ஒளிப்படங்கள், எண்ணிலக்கப்படங்கள், கணிணி முறைமை
   2) இடஞ்சாரா தரவுகள், கணிணி முறைமை, செய்மதிப் படிவங்கள்
   3) தரவுகள், கணிணி முறைமை, பயனாளிகள்
   4) வன்பொருள், எண்ணிலக்கப்படங்கள், இடம்சார் தரவுகள்
   5) மென்பொருள், பயனாளிகள், எண்ணிலக்கப் படங்கள் (..............)

4) இலங்கையின் மொத்த நிலப்பகுதியை 1 : 50, 000 அளவுத்திட்டத்தில் எத்தனை இடவிளக்கவியல் தாள்கள் (Sheets) உள்ளடக்கியுள்ளன
   1) 102  2) 120  3) 95
   4) 92  5) 72 (..............)

5) 15 எண்ணிக்கைகளைக் கொண்ட தரவு ஒழுங்கொன்றின் இடையம்
   1) உயர்ந்தளவான மற்றும் இழிவளவான எண்ணிக்கைகளைக் கூட்டி இரண்டால் பிரித்து வருவது
   2) 8 ஆவது எண்ணிக்கையின் பெறுமானம்
   3) 8ம் , 9ம் எண்ணிக்கைகளைக் கூட்டி இரண்டால் பிரித்து வருவது
   4) 7 ஆவது எண்ணிக்கையின் பெறுமானம்
   5) 7ம் , 8ம் எண்ணிக்கைகளைக் கூட்டி இரண்டால் பிரித்து வருவது (..............)

6) உலகில் மிகப் பழைமையான தேசப்படமாக கருதப்படுவது
1) பபிலோனிய நகரின் திட்டப்படம்
2) எகிப்தின் பைபிரஸ் புல்லில் வரையப்பட்ட நகரத்திட்டப் படம்
3) இன்கா நாகரிக மக்களால் வரையப்பட்ட படம்
4) களிமண்தட்டில் வரையப்பட்ட மொசப்பத்தேமிய நகரத்திட்டப் படம்
5) மொகஞ்சதாரோ நகரின் படம் (..............)

7) வண்டிற் சில்லு போன்று நாலாபக்கமும் சிதறி ஓடும் வடிகாலமைப்பு
1) அளியடைப்பு வடிகால் 2) சட்டத்தட்டு வடிகால் 3) ஆரை வடிகால்
4) மரநிகர் வடிகால் 5) நேர்கோட்டு வடிகால் (..............)

8) கூட்டமாக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி சராசரியைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் சூத்திரம் எது
1) $\frac{\sum(x_1 - x_2)}{N}$ 2) $\frac{\sum(x_1 + \dots x_2)}{\sum n}$ 3) $x_0 + \frac{(\sum f d)c}{n}$
4) $\frac{\sum f d^2}{n} - x_1 + \dots x_2$ 5) $\frac{x - fd}{N} + c$ (..............)

9) தொலையுணர்வு (RS) நுட்பங்களின் மூலம் பெறப்படும் தகவல்கள் முன்வைக்கப்படும் பிரதான வழிகளாவன
1) கருப்படங்கள், இடவிளக்கப்படங்கள், இலக்க முறைப்படங்கள்
2) குத்தான ஒளிப்படங்கள், கிடையான ஒளிப்படங்கள், செய்மதிப் படிமங்கள்
3) 3 D படங்கள், கருப்படங்கள், ஒத்திசைவுப் படங்கள்
4) விமான ஒளிப்படங்கள், செய்மதிப் படிமங்கள், GPS படங்கள்
5) இலக்க முறைப்படங்கள், GPS படங்கள், கிடையான ஒளிப்படங்கள் (..............)

10) கடகக்கோடு குறுக்காகச் செல்லும் மூன்று நாடுகளின் பெயர்களைச் சரியாகத் தருவது
1) பிறேசில், இந்தியா, சுமாத்திரா
2) இலங்கை, இந்தியா, சீனா
3) அவுஸ்ரேலியா, மெக்சிக்கோ, பிறேசில்
4) மெக்சிக்கோ, சீனா, பிரான்ஸ்
5) மெக்சிக்கோ, இந்தியா, சவுதி அரேபியா (..............)

11) வடபசுபிக்கின் மேற்குப் பகுதிகளிலும் சீனக்கடலிலும் ஏற்படும் அயனச் சூறாவளியைக் குறிப்பிடுவது
1) தைபூன் 2) ரொனாடோ 3) இடிமின்னற்புயல்
4) ஹரிக்கேன் 5) சூறாவளி (..............)

12) வளிமண்டலத்தின் எப்படைகளில் வெப்பநிலையானது உயரத்திற்கேற்ப படிப்படியாக குறைந்து செல்கின்றது
1) மாறன் மண்டலம் , படை மண்டலம் 2) மாறன் மண்டலம் , இடை மண்டலம்
3) படை மண்டலம் , இடை மண்டலம் 4) படை மண்டலம் , மாற்றரிப்பு
5) மாற்றரிப்பு, படைத்தரிப்பு (..............)

13) இலங்கையில் அதிகளவு மழைவீழ்ச்சி பெறப்படும் இடம்
1) வட்டவல 2) மாலிபொட 3) அம்பாந்தோட்டை
4) தம்புள்ள 5) பொல்கொட (..............)

14) பின்வருவனவற்றுள் புவியின் கட்டமைப்புக்கள்,
1) மாறன் மண்டலம், படை மண்டலம் , அயன் மண்டலம், வெப்ப மண்டலம்
2) கற்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம், உயிர்க்கோளம்
3) மாறன் மண்டலம், கற்கோளம், நீர்க்கோளம், உயிர்க்கோளம்
4) மாறன் மண்டலம், படை மண்டலம், உயிர்க்கோளம், கற்கோளம்
5) கற்கோளம், மாறன் மண்டலம், படை மண்டலம், உயிர்க்கோளம் (..............)

15) தொம்போலா நிலவுருவம் உருவாகக் காரணமான அரித்தல் கருவி
1) காற்றரிப்பு 2) கடலலை 3) தரைக்கீழ் நீர்
4) பனிக்கட்டியாறு 5) ஓடும்நீர் (..............)

16) கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டில் BW என்பது
1) உலர்கோடைக் காலநிலை 2) உலர்மாரிக் காலநிலை
3) உப ஆட்டிக் காலநிலை 4) பாலைநிலக் காலநிலை
5) சவன்னாக் காலநிலை (..............)

17) பசோல்ட் பாறைகளை அதிகம் கொண்டிருப்பது
1) சீயல் படை 2) சீமாப் படை 3) மேல் இடையோடு
4) கீழ் இடையோடு 5) வெளிக்கோளவகம் (..............)

18) ஈரநில தினம் கொண்டாடப்படுவது
1) பெப்ரவரி - 02 2) மார்ச் - 10 3) யூன் - 05
4) யூலை - 11 5) செப்ரெம்பர் - 18 (..............)

19) இலங்கையின் மத்திய சூழலியல் அதிகார சபையின் பிரதான செயற்பாடு
1) கிராமிய சமூகங்களுக்கு இயற்கை அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அறிவைப் பரப்புதல்
2) நகரப் பகுதிகளில் சூழல் நேய அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுலாக்குதல்
3) புதிய அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்னர் சூழலியல் தாக்க மதிப்பீட்டினை மேற்கொள்ளத் தீர்மானித்தல்
4) சூழலியல் முக்கியத்துவம் தொடர்பான பாதுகாக்கப்பட்ட பகுதிகளைப் பிரகடனம் செய்தல்
5) பிரதேச மட்டத்திலுள்ள சூழலியல் நிறுவனங்களைப் பதிவு செய்தல் (..............)

20) இலங்கையின் சூறாவளிகள் பிரதானமாக இடம்பெறும் காலப்பகுதியானது
1) மே - யூன் 2) மார்ச் - ஏப்ரல் 3) ஒக்ரோபர் - டிசம்பர்
4) டிசம்பர் - பெப்ரவரி 5) ஓகஸ்ற் - செப்ரெம்பர் (..............)

21) அண்மையில் தனது நாட்டின் நகரத்தில் பிறப்புக்கள் தொடர்பாக இறுக்கமான நடைமுறையை அறிமுகம் செய்த நாடு
1) இந்தியா 2) மலேசியா 3) சீனா
4) கனடா 5) பிரான்ஸ் (..............)

22) நிரந்தர வதிவிடம் நோக்கி புலம்பெயரும் வெளிநாட்டு இடம்பெயர்வாளர்கள் சேரும் பிரதான நாடுகளின் தொகுதி
1) ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி
2) சவுதி அரேபியா, ஓமான், கட்டார், குவைத்
3) யப்பான், தென்கொரியா, சீனா, மலேசியா, இந்தியா
4) இத்தாலி, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், சீனா
5) பிரான்ஸ், இத்தாலி, கனடா, சிங்கப்பூர், நோர்வே (..............)

23) இரண்டாவது பசுமைப்புரட்சி என்பது
1) இரசாயன வளமாக்கிப் பயன்பாட்டைக் குறிக்கும்
2) மரபணுத் தொழில்நுட்பத்தைக் குறிக்கும்
3) இரசாயன கிருமிநாசினிகளின் பயன்பாட்டைக் குறிக்கும்
4) புதிய விதையினப் பயன்பாட்டைக் குறிக்கும்
5) மேற்கூறிய யாவும் (..............)

24) கட்டடங்கள் ஒருங்கமைந்து காணப்படும் குடியிருப்புக் கோலம்
1) சிதறிய குடியிருப்புக்கள்
2) நாடாக் குடியிருப்புக்கள்
3) கொத்தணிக் குடியிருப்புக்கள்
4) வலய அமைப்பான குடியிருப்புக்கள்
5) தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புக்கள் (..............)

25) இலங்கையில் இறுதியாக இடம்பெற்ற குடிக்கணிப்பின்படி சனத்தொகை அடர்த்தி குறைந்த மாவட்டம்
1) மன்னார்
2) வவுனியா
3) முல்லைத்தீவு
4) மொனராகலை
5) கிளிநொச்சி (..............)

26) முதலாவது சோள ஏற்றுமதிக் கிராமம் அமைந்துள்ள மாவட்டம்
1) வவுனியா 2) மன்னார் 3) அம்பாந்தோட்டை
4) அநுராதபுரம் 5) பொலநறுவை (..............)

27) ஆசியான் அமைப்பின் நான்கு அங்கத்துவ நாடுகளைக் காட்டும் விடை எது
1) இந்தியா, மாலைதீவு, மலேசியா, தாய்லாந்து
2) கம்போடியா, மியன்மார், பிலிப்பைன்ஸ், வியட்நாம்
3) சிங்கப்பூர், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நேபாளம்
4) லாவோஸ், சீனா, மொங்கோலியா, தாய்வான்
5) பப்புவா நியூகினியா, மலேசியா, வடகொரியா, பங்களாதேஷ் (..............)

28) "e - Sri Lanka" என்பதனைச் சரியாக வரையறை செய்யும் கூற்று
1) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தினை அமுலாக்குவதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு கொள்கை வரைச் சட்டகம்
2) இலங்கையில் மக்களுக்கு மருத்துவ ஆலோசனை மற்றும் பராமரிப்பினை வழங்குவதற்கான ஒரு முறை
3) இலங்கையின் பல்வேறு போக்குவரத்து வலைப்பின்னல்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு முறைமை
4) இலங்கையின் பல்வேறு மாவட்டங்களுக்கிடையிலான தொடர்பாடல் முறை
5) இலங்கையில் இணையத்தளமூடான ஒரு கற்றல் முறை (..............)

29) ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் (EEC) தனது பெயரை "ஐரோப்பிய ஒன்றியம்" (Eu) என மாற்றம் செய்த ஆண்டு
1) 1990
2) 1991
3) 1992
4) 1993
5) 1995 (..............)

30) பிறிக்ஸ் (BRIC'S) எனும் கட்டமைப்பினை உருவாக்கிய நாடுகளின் தொகுதி
1) பிரேசில், ரஸ்யா, இந்தியா, சீனா
2) பிரேசில், ருமேனியா, இஸ்ரேல், கனடா
3) பங்களாதேஷ், ரஸ்யா, அயர்லாந்து, சீனா
4) பங்களாதேஷ், உகண்டா, இந்தோனேசியா, சாட்
5) பல்கேரியா, ரஸ்யா, ஈரான், கொலம்பியா (..............)

**அறிவுறுத்தல்கள்**

- **1ம் வினாவுக்கும் 2ம், 3ம் வினாக்களிலிருந்து ஒரு வினாவையும் தெரிந்தெடுத்து இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **1: 50, 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படமும், வரைபுத்தாள் ஒன்றும் வழங்கப்படும்.**

## பகுதி - II

**1)** இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50, 000 எனும் அளவுத்திட்டத் திலமைந்த கப்புத்தளை இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளி 20 மீற்றராகும். இப்படத்தை பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

1. A - B மற்றும் C - D கோடு நெடுகிலும் காணப்படும் சாய்வுகளைப் பெயரிடுக. (2 புள்ளி)
2. P, Q, R எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்டுள்ள பௌதிக அம்சங்களை அடையாளம் செய்து பெயரிடுக. (3 புள்ளி)
3. நாற்பக்கல் I இல் காணப்படும் நான்கு பண்பாட்டு அம்சங்களை குறிப்பிடுக. (2 புள்ளி)
4. 1 : 50, 000 அளவுத்திட்டத்தில் நேர்கோட்டு அளவுத்திட்டத்தை வரைந்துகாட்டுக. (2 புள்ளி)
5. இப்பிரதேசத்தில் காணப்படும் 2 நிர்வாக எல்லைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
6. இப்பிரதேசத்தின் தரைத்தோற்றத்திற்கும் போக்குவரத்திற்கும் இடையிலான தொடர்பினை விபரிக்குக. (3 புள்ளி)
7. இப்பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டுப் பாங்கின் மூன்று பண்புகளை விபரிக்குக. (6 புள்ளி)

**2)**

1. படங்களின் இரு பிரதான வகைகளைப் பெயரிடுக. (2 புள்ளி)
2. மேலே குறிப்பிட்டவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து அதன் நான்கு பயன்பாடுகளை விபரிக்குக. (4 புள்ளி)
3. புவியியல் தகவல் முறைமை (GIS) நுட்பங்கள் எவ்வாறு புதிய படவரைகலையியலின் விருத்திக்கு பங்களிக்கின்றது என்பதை விளக்குக. (5 புள்ளி)
4. தொலையுணர்வு நுட்பங்களின் மூலம் சேகரிக்கப்படும் 3 தரவு வகைகள் யாவை? (3 புள்ளி)
5. மேலே (4) இல் உம்மால் குறிப்பிடப்பட்ட தரவுகளை பயன்படுத்தி படங்களை அமைப்பதற்கு புவியியல் தகவல் முறைமை நுட்பங்களைப் பிரயோகிப்பதனால் ஏற்படும் மூன்று அனுகூலங்களை பரிசீலிக்குக. (6 புள்ளி)

3)

1. நாடுகள் / பிரதேச ரீதியான உலகின் முன்னனி உருக்கு உற்பத்தியாளர்கள் உருக்கு உற்பத்தியின் சதவீதப் பங்கு (2001-2010) அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை - I**

நாடுகள் / பிரதேச ரீதியான உலகின் முன்னனி உருக்கு உற்பத்தியாளர்கள்
உருக்கு உற்பத்தியின் சதவீதப் பங்கு

| நாடு / பிரதேசம் | 2001 | 2006 | 2010 |
|---|---|---|---|
| சீனா | 18 | 34 | 44 |
| ஐரோப்பிய ஒன்றியம் | 22 | 17 | 12 |
| யப்பான் | 12 | 9 | 8 |
| ஐக்கிய அமெரிக்கா | 11 | 8 | 6 |

மூலம்:- International Iron and steel Institute, 2008

1) இத்தரவுகளைப் பயன்படுத்தி ஒப்பிட்டு பார் வரைபு ஒன்றினை வரைக.

(6 புள்ளி)

2) 2001, 2006, 2010 வரையான காலங்களில் நாடுகளின் உருக்கு உற்பத்தியின் சதவீதப் பங்கினை ஒப்பிட்டு ஆராய்க.

(6 புள்ளி)

**அட்டவணை - II**

| | | | | |
|---|---|---|---|---|
| 125 | 200 | 229 | 125 | 135 |
| 205 | 400 | 160 | 368 | 420 |
| 510 | 428 | 360 | 600 | 511 |
| 600 | 415 | 510 | 609 | 207 |

3) அட்டவணை II இல் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பல் ஒன்றினை அமைக்குக?

(4 புள்ளி)

4) இழைவரையம் ஒன்றினையும், மீடிறன் பல்கோணி ஒன்றினையும் வரைக.

(4 புள்ளி)